2018 ஜூலை 3]

255—

நியாய விலைக் கடை

***7547—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டை தொகுதி, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பகுதியில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு அதே பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள அமுதம் நியாய விலை அங்காடியில், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் குடியிருப்பைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இந்தப் பகுதியில் புதிதாக பகுதிநேரக் கடை ஒன்றைத் துவங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* CLRI *என்று சொல்லப்படுகின்ற* Central Leather Research Institute *குடியிருப்பு, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டிருக்கிறது. 360 குடியிருப்புகளைக் கொண்டு, ஏறத்தாழ 250-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தப் பகுதியில் இருக்கிற குடும்ப அட்டைதாரர்கள் பின்புறம் கோட்டூர் பகுதியிலே, ஏரிக்கரைத் தெருவில் இருக்கின்ற ரேஷன் கடையில் சென்று உணவுப் பொருட்களை வாங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அன்று டெல்லியில் நடைபெற்ற உணவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டத்தில், ஒரு முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.*

வீடுகள்தோறும் நேரடியாகவே சென்று, உணவுப் பொருட்களை வழங்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் அறிவுறுத்தியிருக்கின்ற இந்தச் சூழலில், CLRI-ல் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான கடை ஒன்று அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. எனவே, அந்தக் கடையை அமைத்துத் தர வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் குடியிருப்புப் பகுதியில் இருக்கின்ற குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கையை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். தற்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 155. தனியாக ஒரு கடையைப் பிரிப்பதற்கு தேவையான குடும்ப அட்டைகள் உள்ளதனால், அந்தப் பகுதியில், தகுதியான இடம் கிடைக்கும்பட்சத்தில், அங்கேயே ஒரு பகுதிநேரக் கடையை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியில்லை என்றால், 155 குடும்ப அட்டைகளையும் அருகில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பிள்ளையார் கோயில் தெரு, களிங்குன்றம் பகுதியில் இயங்கும் TUCS கடையோடு இணைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, CLRI பகுதியிலேயே ஒரு இடத்தினை, நான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற குடியிருப்பு நலச் சங்க நிருவாகிகளோடு கலந்து பேசி, பெற்றுத் தருகிறேன். அந்தப் பகுதியிலேயே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், நான் ஏற்கெனவே சொன்ன அந்தக் கூட்டத்தில், மத்திய நுகர்வோர் நலத் துறை அமைச்சர் பெருமதிப்பிற்குரிய திரு. ராம்விலாஸ் பஸ்வான் அவர்கள், ஒரு

2018 ஜூலை 3]

செய்தியினை அறிவித்திருக்கிறார்கள். அது என்னவென்றால், 3 மாதங்களுக்குமேல் உணவுப் பொருட்களை வாங்காத குடும்ப அட்டைகளை இரத்து செய்வதற்கு மாநில அரசுகள் முனைய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, கட்டடப் பணி, சாலைப் பணி, நூற்பாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு வேலைக்குச் செல்கின்றனர். 2 மாதங்கள், 3 மாதங்கள் என்று மாநகரப் பகுதிகளுக்கு வேலைக்கு வந்துவிடுகிறார்கள். அப்படி மாநகரப் பகுதிகளுக்கு வேலைக்கு வந்துவிடுகின்றபோது, அவர்களுடைய குடும்ப அட்டைகளின்மூலம் பொருட்களை வாங்க இயலாத நிலை ஏற்படும். எனவே, 3 மாதங்கள் கழித்து, அவர்களுடைய கிராமத்திற்குச் செல்கின்றபோது, அவர்களுடைய குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டுவிட்டன என்கின்ற ஒரு நிலை வருமானால், ஒரு கோடியே 96 இலட்சம் குடும்ப அட்டைகளோடு இன்றைக்கு தமிழகத்தில் ஏழையெளியவர்களுக்காகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு பொது விநியோகத் திட்டம் என்பதற்கான அந்தப் பொருளே இல்லாமல் போய்விடும். எனவே, மத்திய அமைச்சரின் அந்த அறிவுரையை, மாநில அரசு கண்டிப்பாக பின்பற்றக் கூடாது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அதை ஒரு அறிவுரையாகத்தான் கூறியிருக்கிறாரே தவிர, அது ஒன்றும் கொள்கை முடிவு அல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரையில், அதுபோன்று 3 மாதங்கள், 4 மாதங்கள் அல்லது 5 மாதங்கள் பொருட்களை வாங்கவில்லை என்று சொன்னாலும், அந்தக் குடும்ப அட்டைகளெல்லாம்* stop supply *என்கின்ற அளவிலே நிறுத்தப்படுவது கிடையாது. அவர்கள் எப்போது ஊருக்கு வந்தாலும் தங்களுடைய குடும்ப அட்டைகளை, நாங்கள் ஊருக்கு வந்துவிட்டோம் என்று மறுபடியும்* register *செய்துவிட்டால், அவர்களுக்கு பொருட்கள் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இதே முறைதான் வருங்காலத்திலும் பின்பற்றப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*